DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.73/2024 & 90/2024

PROSECUTION WITNESS No - PW-3

| | | | |
|---|---|---|---|
| Name : | சத்தியமூர்த்தி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026.

1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 4 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது காரைக்குடி வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.03.2019 ம் தேதி மானாமதுரை சிப்காட் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தேன். அதே காலத்தில் என்னுடன் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் என்பவர் சிறுகுடி கிராம நிர்வாக அலுவலர் சிவபாலசுப்பிரமணியன் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 60/2019 இதச.பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை பார்த்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கு கோப்பை எனது பார்வைக்காக சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் அன்றைய தினமே இவ்வழக்கின் எதிரிகளான ராஜா, ராஜேஸ்வரன், சேகர், செல்வராஜ் ஆகியோர்களை கைது செய்து 1 வது எதிரி ராஜா என்பவரிடம் சாட்சிகள் சிவபாலசுப்பிரமணியன் மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும்

வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணன்இ மணி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் தயாரித்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றிய TN63BE0564 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தை உரிய படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். அதன்பின்பு வழக்கு கோப்பை பார்வையிட்ட நான் வழக்கின் சாட்சிகளை மீண்டும் விசாரித்து சரியாக இருந்ததால் ஆவணங்களை பார்வையிட்டு அதனடிப்படையில் இவ்வழக்கிற்கு இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கடந்த 05.08.2019 அன்று தயாரித்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act படி குற்ற இறுதி அறிக்கை தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எனது விசாரணையில் சாட்சி கிருஷ்ணன் சொன்ன செய்தியைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவ காலத்தில் நான் எங்கு பணியில் இருந்தேன் என்றால் அதே காவல் நிலையத்தில்தான் பணியில் இருந்தேன். வழக்கு கோப்பை நான் எந்த தேதியில் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் கடந்த 10.07.2019 ல் பெற்றுக்கொண்டேன். சம்பவம் நடந்த காலத்திலிருந்து 4 மாதங்களுக்கு பிறகு தான் வழக்கு கோப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு எதிரிகளை நான் நேரடியாக கைது செய்யவில்லை என்றும் அப்போது

அவர்களை நான் பார்க்கவும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். புகாரில் வழக்கு சம்பவ இடம் குறித்த சர்வே எண் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் திருடப்பட்டதாக சொல்லப்படும் மணலின் அளவு குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கில் கைப்பற்றிய லாரி மற்றும் இருசக்கர வாகனங்களை யார் நிலையம் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் வாகனங்களுடன் எதிரிகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தது குறித்து நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரிகளை கோப்புகளின் அடிப்படையில் அன்று பகல் 12.00 மணிக்கு கைது செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு கொடுத்த நிலையில் வழக்கு சொத்து மற்றும் எதிரிகள் கைது நிகழ்வு பகல் 12.00 மணிக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரிதான். இவ்வழக்கின் படிவம் 91 ல் இருசக்கர வாகனம் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகமில்லை. அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் எந்த வாகனம் யார்யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளின் பெயர்கள் சாட்சி பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் அதில் சிவன் சிறுகுடி குரூப் கிராம நிர்வாக அலுவலர் என்று குறிப்பிட்டு இருப்பதால் சிவபாலசுப்பிரமணியன் என்பவர்தான் சிவன் என்று குறிப்பிட்டு கையொப்பமிட்டுள்ளார். அசல் ஆவணத்தில் சிவன் என்று பெயர் எழுதியும் கோப்பில் உள்ள நகலில் சிவன் என்று கையொப்பமிட்டும் மாறுபட்ட முறையில் சிவன் கையெழுத்து உள்ளது என்றால் கையெழுத்தைத்தான் அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கில் சட்டப்பிரிவு 21(4) MMDR Act நீக்கப்பட்டு இதச பிரிவு 379 மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப குற்ற அறிக்கை நீதிமன்றத்தால் வாசிக்கப்படும் போது

குறிப்பிடப்பட்டதாகும். இவ்வழக்கு தொடர்பாக கனிமவளத்துறைக்கு தனியாக தகவல் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கு புள்ளி விவர கணக்கிற்காக உயர் அதிகாரிகளின்ஆலேசனையின் பேரில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதிரிகள் மீது பொய்யாக தொடுக்கப்பட்ட வழக்காகும் என்றால் சரியல்ல. மேலும் எதிரி கைது வழக்கு ஆவணங்கள் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தனிநபர் புகார் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு பின்னர் வந்த ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார். வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.18 17:40:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை